**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**முன்னிலை:– திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருப்பூர்.**

**2025–ம் ஆண்டு ஜுலை மாதம் 25 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீ விசுவாவசு வருடம், ஆடி திங்கள் 9 ம் நாள்**

**இடைக்கால மனு எண். 339/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 22/2025**

K.ராமசாமி ..மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

M/s. ரிலையன்ஸ் B.P மொபிலிட்டி லிமிடெட்,
அதன் பொது அதிகார முகவர்
கருண் கிருஷ்ணன் ..எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 10.07.2025ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ஸ்ரீராம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.ரமணி அவர்கள் முன்னிலையாகியும், நிகழ்த்திய இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள தாவாவை நிராகரிக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 7, விதி 11 ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :

**2.1** மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. கடந்த 18.02.2005ம் தேதியிட்ட குத்தகை ஒப்பந்தம், ஷரத்து 3 (Viii) குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரர், எதிர்மனுதாரருக்கு ஆதரவாக தாவாசொத்து பொறுத்து குத்தகை ஒப்பந்தத்தை 18.02.2025 ம் தேதி முதல் மேலும் 20 வருட காலங்களுக்கு புதுப்பித்து கொடுக்க வேண்டியும், தவறும்பட்சத்தில் நீதிமன்றம் மூலம் அதனை நிறைவேற்ற பரிகாரம் வேண்டியும் எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல.

**2.2** கடந்த 18.02.2005ம் தேதியிட்ட குத்தகை ஒப்பந்தம், கடந்த 17.02.2025ம் தேதியன்று முடிவடைந்த விட்டதை எதிர்மனுதாரர் வழக்குரை பத்தி 8ல் ஒப்புக்கொண்டுள்ளதால் அதனை மீண்டும் செயலுறுத்த கோரியுள்ளது நிலைக்கத்தக்கதல்ல. கடந்த 18.02.2005ம் தேதியிட்ட குத்தகை ஒப்பந்தத்தை ஆவண எண்.1314/2005ன் படி திருப்பூர், மாவட்ட பதிவாளர், அவர்களிடம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தம் கடந்த 17.02.2025ம் தேதியன்றே முடிவடைந்து விட்டது. எனவே டீலர்சிப்பின் அடிப்படையிலோ அல்லது தாவா சொத்து பொறுத்து ஏற்பட்ட குத்தகையின் அடிப்படையிலோ எவ்வித ஒப்பந்தமும் நிலுவையில் இல்லை. ஒப்பந்தங்களை புதுப்பிப்பதற்கு நிலுவையில் இல்லாதபோதும் மற்றும் ஒப்பந்தத்திற்கு காலக்கெடு இன்றியமையாதது என்பதாலும் வாதி கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளது.

**2.3** கடந்த 18.02.2005ம் தேதியிட்ட குத்தகை ஒப்பந்தம் பத்தி 3 (Vii)ற்கு முரணாக எதிர்மனுதாரர்/வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார். கடந்த 07.05.2020ம் தேதியன்று வாதியின் அசென்மெண்ட் ஒப்பந்தப்படி மனுதாரரின் எழுத்துபூர்வமான ஒப்புதல் செயலற்றதாக உள்ளது. அசல் வழக்கில் முதல்நோக்கு வழக்கு மற்றும் வழக்கு மூலம் இல்லை. குத்தகை ஒப்பந்தம் பத்தி 3 ( Vii) ன் கீழ் மனுதாரரின் எழுத்துபூர்வமான ஒப்புதல் இல்லாமல் மேலும் 20 வருட காலத்திற்கு

குத்தகை ஒப்பந்தத்தை புதுப்பிக்கவேண்டி எதிர்மனுதாரர் கோருவது சட்டப்படி செயல்படுத்த முடியாத ஒன்று. கடந்த 06.01.2025ம் தேதியிட்ட மனுதாரர் அனுப்பிய பதில் கடிதம் மற்றும் 28.01.2025ம் தேதியிட்ட மனுதாரர் அனுப்பிய ஆவணம் மூலம் ஒப்பந்தம் முடிவிற்கு வந்தது தெளிவாகிறது. ஒப்பந்த காலம் முடிவுற்றதால் நிலஉரிமையாளர்/டீலர் மற்றும் குத்தகைதாரர் என்ற உறவு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு இடையே இல்லை. கடந்த 15.05.2025ம் தேதியன்று திருப்பூர், மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கிய உத்தரவை மறைத்து அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.4** அதன்படி ரிலையன்ஸ் இண்டஸ்டிரிஸ் வழங்கப்பட்ட தடையில்லா சான்று ரத்து செய்யப்பட்டுள்ளது. அதன்படி பெட்ரோலியம் சார்ந்த பொருட்களை விற்பனை செய்ய எதிர்மனுதாரரால் இயலாது. கடந்த 20.05.2025ம் தேதியிட்ட சென்னை, PESO வழங்கிய செயல்முறை ஆணை குறித்து வழக்குரையில் தெரிவிக்கவில்லை. தாவா சொத்தில் விற்பனை செய்வதற்கு வழங்கப்பட்ட உரிமம் மேற்படி செயல்முறை ஆணையின் மூலம் ரத்து செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் எதிர்மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் சட்டத்திற்கு புறம்பாக தாவா சொத்தை ஆக்கிரமித்துள்ளார். அசல் வழக்கில் வழக்கு மூலம் இல்லை. எனவே அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள தாவாவை நிராகரிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :</u>

**3.1** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் முகாந்திரம் இல்லை. உரிமையில் நடைமுறை சட்டம் கட்டளை 7, விதி 11ல் குறிப்பிட்டுள்ள காரணிகளின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி சட்டம், கட்டளை 7 விதி 11ன் கீழ் தாக்கல் செய்யப்படும் மனுவை தீர்மானிக்கும்போது நீதிமன்றம் வழக்குரையில்

குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மட்டும் தான் கருத்தில்கொள்ள வேண்டுமே தவிர தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனை குறித்து தீர்வு காண இயலாது. அசல் வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதா, வழக்குரை உரிமை உள்ளதா, ஒப்பந்தம் நிலுவையில் உள்ளதா என்பதை பொறுத்து அசல் வழக்கின் விசாரணைக்கு பின்னிட்டுத்தான் தெரியவரும்.

**3.2** கடந்த 18.02.2005ம் தேதியிட்ட குத்தகை ஒப்பந்தம், ஷரத்து 3 (vii) மற்றும் 6 (ii) ன்படி குத்தகை பெற்றவரான M/s.ரிலையன்ஸ் இண்டஸ்ரடீஸ் நிறுவனம் அதன் குத்தகை உரிமத்தை குத்தகை வழங்கியவரின் எழுத்துபூர்வமான ஒப்புதல் இல்லாமல் வழங்குவதற்கு உரிமை உள்ளது. மேற்படி விபரம் தெரிந்து ஒப்பந்தத்தில் மனுதாரர் கையொப்பம் செய்துள்ளார். மேலும் அதனை ஒப்பந்த காலம் முழுவதும் ஒப்புக்கொண்டுள்ளார்.

**3.3** கடந்த 26.05.2020ம் தேதியிட்ட அசென்மெண்ட் பத்திரம் மூலம் M/s ரிலையன்ஸ் இண்டஸ்ரிஸ் நிறுவனம் அதன் முழு குத்தகையையும் எதிர்மனுதாரருக்கு வழங்கியுள்ளது. மேற்படி விபரம் 14.05.2020ம் தேதியன்று மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரிடையே குத்தகை வழங்குபவர், குத்தகை பெறுபவர் என்ற உறவு இருந்து வந்தது. கடந்த 5 வருடங்களாக மேற்படி அசென்மெண்ட் குறித்து மனுதாரர் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

**3.4** எதிர்மனுதாரர் தாவா சொத்தில் குத்தகைதாரர் என்ற அடிப்படையில் சட்டப்படி வாடகைதாரராக தாவா சொத்தில் இருந்து வருகிறார். எதிர்மனுதாரரை சட்ட நடைமுறையை தவிர வேறு வகையில் தாவா சொத்தில் இருந்து காலி செய்ய இயலாது. 18.02.2005ம் தேதியிட்ட குத்தகை ஒப்பந்தம் 18.02.2005ம் தேதியிட்ட டீலர்சிப் ஒப்பந்தம் ஆகிய இருவேறு ஒப்பந்தங்களும் தனித்தனி ஷரத்துக்களை கொண்டு ஏற்படுத்தப்பட்டவை ஆகும். மேற்படி விபரங்கள் அனைத்தும் அசல் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3.5** கடந்த 06.01.2025ம் தேதியிட்ட கடிதம் மூலம் மனுதாரர் ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கு மறுத்ததன் பேரில் அசல் வழக்கிற்கான வழக்கு மூலம் தொடங்கியுள்ளது. ஒப்பந்த காலம் முடிவதற்கு முன்பே அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அசல் வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதாகும். ஒப்பந்த காலம் முடிவதற்கு முன்பே அதை புதுப்பிப்பதற்கு எதிர்மனுதாரர் கடிதம் அனுப்பியுள்ளார். அதற்கு மனுதாரர் மறுத்த பின்பு அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.6** அசல் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளபோது மனுதாரர் திருப்பூர், மாவட்ட வருவாய் அலுவலரை அணுகி ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். அசல் வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்பு மேற்படி நடவடிக்கைகள் மனுதாரரால் எடுக்கப்பட்டுள்ளது. குத்தகை ஒப்பந்தம் முடிவடைந்து விட்டதா என்பது குறித்தும், அதனை மீண்டும் புதுப்பிக்க இயலுமா என்பது குறித்தும் மற்றும் எதிர்மனுதாரர் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதா என்பது குறித்தும் அசல் வழக்கின் தீர்வில் தான் தீர்மானிக்க இயலும். எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், " மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**6. <u>தீர்வு</u> :**

**6.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், எதிர்மனுதாரர் குத்தகை ஒப்பந்தத்தை ரிலையன்ஸ் இண்டஸ்டிரிஸ் லிமிடெட் நிறுவனத்துடன் தான் ஏற்படுத்திக்கொண்டதாகவும், ஆனால் அசல் வழக்கானது ரிலையன்ஸ்

BP மொபிலிட்டி நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், குத்தகை உரிமை மாற்றம் பெற்றுள்ள மனுதாரரால் குத்தகை ஒப்பந்தத்தை புதுப்பிக்க உரிமை கோர இயலாது என்றும், எதிர்மனுதாரர் மனு சொத்தின் உரிமையாளர் என்றும், அவரது டீலர்சிப் வேல்முருகன் ஆட்டோமொபைல்ஸ்க்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், குத்தகை ஒப்பந்த காலமான 20 ஆண்டு காலம் முடிந்து விட்டதால், குத்தகை ஒப்பந்தம் என்ற ஒன்றே இல்லை என்றும், மனுதாரருக்கும் ரிலையன்ஸ் இண்டஸ்டிரிஸ் லிமிடெட் நிறுவனத்திற்கும் தான் தொடர்பு இருந்தது என்றும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதால் அசல் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கில் வழக்குரை உரிமை இல்லை என்றும், குத்தகை ஒப்பந்தம், ஷரத்து 2 ( iv) ன்படி குத்தகை காலம் முடிந்த பிறகு அதனை இடிக்கும் உரிமை மனுதாரருக்கு உள்ளது என்றும், எதிர்மனுதாரர் அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரத்தை வழங்குவதற்கு இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றும், எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட குத்தகை மாற்றம் உரிமை குறித்து மனுதாரருக்கு தகவல் மட்டும் தான் தெரிவிக்கப்பட்டது என்றும், அது குறித்து மனுதாரரிடம் எழுத்துபூர்வமான ஒப்புதல் பெறவில்லை என்றும், குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் ரிலையன்ஸ் இண்டஸ்டிரிஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு தான் பொருந்தும் என்றும், எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட தடையின்மை சான்று ரத்து செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் இன்றைய தேதி வரையிலான குத்தகை தொகையை எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்தவில்லை என்றும், உரிமையியல் நடைமுறை சட்டம், பிரிவு 9ன் கீழ் எதிர்மனுதாரர் உரிமை கோர இயலாது என்பதால் மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டு **மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம், C.Albert Morris Vs K.Chandra sekaran & others (2006) 1 SCC 228** வழக்கில் வழங்கப்பட்ட முன்தீர்ப்பை மேற்கோள் காட்டினார்.

**6.2** எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், எதிர்மனுதாரர் குத்தகை ஒப்பந்தத்தில் தரப்பினர் இல்லை என்பதால், எதிர்மனுதாரர் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள உரிமையை செயல்படுத்த முடியாது என்று மனுதாரர் கூறுவதை உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 7 விதி 11ன் கீழ் தீர்மானிக்க இயலாது என்றும், அசல் குத்தகை பெற்றவரிடமிருந்து எதிர்மனுதாரர் குத்தகையை தொடர்வதாலும், அதன் விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், அதனை மனுதாரர் ஒப்புக்கொண்டு செயல்பட்டுள்ளதாலும், குத்தகை ஒப்பந்தம் ஷரத்து 3 (Vii)ல் குத்தகை உரிமையை மாற்றம் செய்து கொடுப்பதற்கு மேற்படி ஷரத்தே குத்தகை வழங்கியவரின் எழுத்துபூர்வமான ஒப்புதலாக கருதப்படும் என்று குறிப்பிட்டுள்ளதாலும் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது 18.02.2005ம் தேதியிட்ட குத்தகை ஒப்பந்த ஷரத்து 3 (Viii)ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள்படி மனுதாரர்/பிரதிவாதி தாவா சொத்து பொறுத்து குத்தகை ஒப்பந்தத்தை 18.02.2025ம் தேதி முதல் மேலும் 20 வருட காலத்திற்கு எதிர்மனுதாரர்/வாதி நிறுவனத்திற்கு புதுப்பித்து தரவேண்டும் என்று குறித்த வகை நிவாரணம் கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.4** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில், குத்தகை ஒப்பந்த காலமான 20 ஆண்டு காலம் முடிவடைந்து விட்டதால் மேற்படி குத்தகை ஒப்பந்தத்தை செயல்படுத்த முடியாது என்றும், ஒப்பந்தத்திற்கு காலக்கெடு அவசியமான ஒன்று என்றும், மனுதாரர் அனுப்பிய கடிதத்தில் குத்தகை முடிவு பெற்றதை குறிப்பிட்டுள்ளார் என்றும், குத்தகை ஒப்பந்த காலம் நிலுவையில் இல்லை என்பதால் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரிடையே குத்தகை வழங்கியவர் மற்றும் குத்தகை பெற்றவர் என்ற உறவு இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**6.5** எதிர்மனுதாரரின் எழுத்துபூர்வமான சம்மதத்துடன் ரிலையன்ஸ் இண்டஸ்டிரிஸ் லிமிடெட் நிறுவனத்திடம் குத்தகை உரிமை மாற்றத்தை மனுதாரர் நிறுவனம் பெறவில்லை என்றும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று எதிர்மனுதாரர் தரப்பில் கூறும் நிலையில், கடந்த 18.02.2005ம் தேதியிட்ட ரிலையன்ஸ் இண்டஸ்டிரிஸ் நிறுவனம் மற்றும் எதிர்மனுதாரரிடையே ஏற்பட்ட குத்தகை ஒப்பந்தத்தில் குத்தகை பெறுபவர் என்பவர் குத்தகை பெறுபவரையும், அவருக்கு பின் ஒப்பந்தத்தை தொடர்ந்து நடைமுறைபடுத்துபவரையும், குத்தகை உரிமை மாற்றம் பெற்றவரையும் குறிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், குத்தகை ஒப்பந்தம், ஷரத்து 3 (Viii)ல் அவ்வாறு குத்தகை உரிமை மாற்றம் செய்து கொடுப்பதற்கு குத்தகை வழங்கியவரின் எழுத்துபூரவமான ஒப்புதலாக மேற்படி ஷரத்தே கருதப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**6.6** 1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 7 விதி 11ல் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளின் அடிப்படையில் இம்மனு தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரிடையே தாவா சொத்து பொறுத்து குத்தகை ஒப்பந்தம் ஏற்பட்டதா என்பது குறித்தும், குத்தகை ஒப்பந்தம், ஷரத்து 3 (Vii)ன் செல்லும் தன்மை குறித்தும், உரிமை மாற்றம் பெற்றவரான இந்த எதிர்மனுதாரருக்கு குத்தகையை புதுப்பிக்கும் உரிமை உள்ளதா என்பதையும் அசல் வழக்கின் தீர்வில் தான் முடிவு செய்ய இயலும் என்றும், அதனை மேற்படி சட்டம், கட்டளை 7 விதி 11ன் கீழ் தீர்மானிக்க இயலாது என்று முடிவு செய்து மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 25 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.07.25 18:18:12 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்

**இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.07.25 18:18:17 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்

***<u>சீரான/வரைவு உத்தரவு</u>***

**இடைக்கால மனு எண்.**363/2024

**in**

**அசல் வழக்குஎண்.** 134/2021

**நாள் :** 03.10.2024